සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

21.08.2018 / 0830 - 1030

ගෘහ ආර්ථික විද්‍යාව I
மனைப் பொருளியல் I
Home Economics I

28 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**
- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ கணிப்பானைப் **பயன்படுத்தக்கூடாது.**
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நிறங்கள் மூலம் பல்வேறு உணர்வுகள் தூண்டப்படும். சிவப்பு நிறத்தின் மூலம் தூண்டப்படும் இரு உணர்வுகள்
(1) வெப்பமான தன்மையும் செயற்படு தன்மையும்
(2) பின்னடையும் தன்மையும் வெப்பமான தன்மையும்
(3) முன்கொணரும் தன்மையும் சிறியதாகக் காட்டும் தன்மையும்
(4) செயற்படு தன்மையும் பாரமான தன்மையும்
(5) பின்னடையும் தன்மையும் சிறியதாகக் காட்டும் தன்மையும்

**2.** அறையொன்றிற்கு நிறம் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பாவு (சிவிலின்) | வெள்ளை | திரைச்சீலை | ஊதா மற்றும் இளம் கபில நிறம் |
| சுவர் | இளம் பச்சை | தளபாட மேலுறைகள் | இளம் ஊதா |
| தரை | வெள்ளை | மலர் ஒழுங்கு | கடும் பச்சை மற்றும் செம்மஞ்சள் |

இவ்வறைக்குப் பயன்படுத்தியுள்ள நிறச் சேர்மானம்/நிறத்திட்டம்
(1) இணைந்த நிற இசைவு
(2) மிகை நிரப்பு நிற இசைவு
(3) பிரிப்பு மிகை நிரப்பு நிற இசைவு
(4) இரட்டை மிகை நிரப்பு நிற இசைவு
(5) மும்மை நிற இசைவு

**3.** மனையொன்றில் காணப்பட்ட இரண்டு பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
- மாடிப் படிகள்
- சதுரமான தரை ஓடுகள் (Floor tiles) பதிக்கப்பட்டுள்ளன.

இவ்விரு பண்புகளின் அடிப்படையில் சந்தம் வெளிக்காட்டப்படும் இரண்டு விதங்கள் முறையே
(1) மீளுதலும் எதிர்ப்பும்
(2) எதிர்ப்பும் நிலைமாறுகையும்
(3) நிலைமாறுகையும் எதிர்ப்பும்
(4) எதிர்ப்பும் மீளுதலும்
(5) மீளுதலும் நிலைமாறுகையும்

**4.** பின்வருவனவற்றில் சமூக வளங்களை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) தபால் காரியாலயம், காணிகள், வீடுகள்
(2) புகையிரத நிலையம், நூலகம், விளையாட்டு மைதானம்
(3) காணிகள், திரையரங்கு, தபால் காரியாலயம்
(4) நூலகம், கட்டடங்கள், வீடுகள்
(5) விளையாட்டு மைதானம், புகையிரத நிலையம், கட்டடங்கள்

tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

**5.** பின்வருவனவற்றுள் நீர்க் கட்டணம் தொடர்பான **பிழையான** கூற்று எது ?
(1) முதல் 15 அலகுகளும் சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படும்.
(2) நீரைப் பயன்படுத்தும்போது செலவாகும் அலகுகளுக்கேற்ப செலுத்தப்பட வேண்டிய கட்டணம் தீர்மானிக்கப்படும்.
(3) நீர் அலகொன்றுக்கான கட்டணம் விசேட சேவைகளின் தேவைக்கமைய வேறுபடும்.
(4) சகல விலைப் பட்டியலுக்கும் நிலையான மாதாந்தக் கட்டணமொன்று அறவிடப்படும்.
(5) நீர்க் கட்டணச் சிட்டையில் அலகொன்றாகக் கருதப்படுவது 100 லீற்றர் நீராகும்.

**6.** பிரதான மின் வழங்கலிலிருந்து மனைக்கான மின்சுற்றுக்குக் கிடைக்கும் மின்னை இணைத்தல் அல்லது துண்டித்தல் பின்வரும் எந்த உபகரணம் மூலம் மேற்கொள்ளப்படும் ?
(1) இடறு ஆளி (2) உருகி (3) பிரதான ஆளி
(4) சேவைமானி (5) நுண் சுற்றுடைப்பான்

**7.** மின் கேத்தலொன்றின் வலு 750 W ஆகும். அதனை அரை மணித்தியாலம் பயன்படுத்தும்போது விரயமாகும் மின் சக்தியின் அளவு கிலோவாற்று மணித்தியாலங்களில்
(1) 0.375 (2) 0.650 (3) 0.750 (4) 1.500 (5) 1.650

**8.** $C_{12}H_{22}O_{11}$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கொண்ட காபோவைதரேற்று
(1) அமைலோசு (2) செலுலோசு (3) குளுக்கோசு (4) கலக்றோசு (5) மோல்ரோசு

**9.** சுக்குரோசை இனங்காணும் இரசாயனச் சோதனைக்காகத் தேவைப்படும் சோதனைப் பொருள்கள் எவை?
(1) அயடீன், ஐதான சல்பூரிக் அமிலம்
(2) அயடீன், பொற்றாசியம் ஐதரொட்சைட்டு
(3) ஐதான சல்பூரிக் அமிலம், பீலிங்கின் A மற்றும் B கரைசல்
(4) பொற்றாசியம் ஐதரொட்சைட்டு, பீலிங்கின் A மற்றும் B கரைசல்
(5) செறிந்த நைத்திரிக் அமிலம், அயடீன்

**10.** உடலினுள் நீரில் கரையக்கூடிய நார்ப்பொருளின் தொழிற்பாடாவது
(1) சுற்றுச்சுருங்கல் அசைவை அதிகரிக்கும்.
(2) கொலஸ்ரோல் உறிஞ்சப்படுவதைத் தடைசெய்யும்.
(3) மலத்தின் அளவை அதிகரிக்கும்.
(4) குடல் நுண்ணுயிர்களுக்கு வளர்ப்பூடகத்தை வழங்கும்.
(5) மலச்சிக்கலைத் தடுக்கும்.

More Past Papers at
tamilguru.lk

**11.** பின்வருவனவற்றுள் அத்தியாவசியமான இரண்டு அமினோ அமிலங்களாவன
(1) வலின் மற்றும் சிஸ்டய்ன் (2) மெத்தியோனின் மற்றும் லைசீன்
(3) சிஸ்டின் மற்றும் திரியோனின் (4) ரைரோசின் மற்றும் லியூசின்
(5) கிளைசின் மற்றும் ஐசோலியூசின்

**12.** இணைந்த புரதங்கள் இரண்டாவன
(1) ஹிமோகுளோபின் மற்றும் லிபோ புரதம் (2) பொசுப்போ புரதம் மற்றும் பொலிபெப்ரைட்டு
(3) லிபோ புரதம் மற்றும் டைபெப்ரைட்டு (4) ஹிமோகுளோபின் மற்றும் பொலிபெப்ரைட்டு
(5) பொசுப்போ புரதம் மற்றும் டைபெப்ரைட்டு

**13.** ஒமேகா - 6 கொழுப்பமிலங்களாவன
(1) லினோலெனிக் அமிலம் மற்றும் அரக்கிடோனிக் அமிலம்
(2) அரக்கிடோனிக் அமிலம் மற்றும் ஒலேயிக் அமிலம்
(3) லினோலெனிக் அமிலம் மற்றும் லினோலெய்க் அமிலம்
(4) ஒலேயிக் அமிலம் மற்றும் லினோலெய்க் அமிலம்
(5) லினோலெய்க் அமிலம் மற்றும் அரக்கிடோனிக் அமிலம்

**14.** இரண்டு ஒட்சியெதிரிகள்
(1) மகனீசியம், விற்றமின் C (2) செலேனியம், விற்றமின் D
(3) மகனீசியம், விற்றமின் A (4) செலேனியம், விற்றமின் E
(5) விற்றமின் E, விற்றமின் D

**15.** அயடீன் குறைபாட்டின் நோய் அறிகுறியாவது
(1) தலைமுடியின் நிறம் மாற்றமடைதல் (2) குருதி உறைதல் தாமதமாதல்
(3) கீளோசிஸ் (4) வளர்ச்சி குன்றல்
(5) மயக்க நிலை

[பக். 3 ஐப் பார்க்க

**16.** உடலுக்குத் தேவையான நுண் போசணைப் பொருள்கள் தொடர்பான சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- அமில கார சமநிலை
- குருதியமுக்கம்
- வாந்தியும் வயிற்றுப்போக்கும்
- தசைப்பிடிப்பு/கெண்டை பிரளுதல்

மேற்படி விடயங்கள் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு நுண் போசணைப் பொருள்கள்
(1) மகனீசியம், நாகம் (2) இரும்பு, கல்சியம்
(3) சோடியம், பொற்றாசியம் (4) செம்பு, சோடியம்
(5) மகனீசியம், பொற்றாசியம்

**17.** குருதிச்சோகைக்கு **ஏதுவாகாதது**
(1) போலிக் அமிலக் குறைபாடு (2) விற்றமின் C குறைபாடு
(3) விற்றமின் $B_{12}$ குறைபாடு (4) செம்பு குறைபாடு
(5) பொசுபரசு குறைபாடு

**18.** B தொகுதிக்குள் உள்ளடங்கும் ஒரு விற்றமின்
(1) இனொஸிடோல் (2) ரெடினோல்
(3) டொகோபெரோல் (4) கொலிகல்ஸிபரோல்
(5) நப்தாகுவினோன்

**19.** பின்வருவனவற்றுள் எந்த விற்றமின்களின் குறைபாட்டினால் செரொப்தல்மியா மற்றும் கெரட்டோமலேசியா எனும் நிலைமைகள் வெளிக்காட்டப்படும் ?
(1) விற்றமின் A (2) விற்றமின் $B_1$ (3) விற்றமின் $B_2$ (4) விற்றமின் C (5) விற்றமின் D

**20.** சிபாரிசு செய்யப்பட்ட நாளாந்த போசணைத் தேவை அட்டவணை (2007) இற்கு அமைவாக புரதத் தேவை தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பிள்ளைப் பருவத்தில் இத்தேவை மாற்றமடையாது காணப்படும்.
(2) கட்டிளமைப் பருவத்தில் பெண்களை விட ஆண்களுக்கான இத்தேவை அதிகமானது.
(3) வயோதிபப் பருவத்தில் இதன் தேவை ஆண், பெண் இரு சாராருக்கும் சமனாகக் காணப்படும்.
(4) கர்ப்ப காலத்தில் இரண்டாம், மூன்றாம் மும்மாதங்களில் இதன் தேவை சமனாகக் காணப்படும்.
(5) பாலூட்டும் காலத்தில் முதலாவது வருடத்தில் இதன் தேவை படிப்படியாக அதிகரிக்கும்.

**21.** குளூற்றன், கொலாஜன் மற்றும் ஒவோவிட்டலின் எனும் புரதச் சத்துகள் அடங்கிய உணவு வகைகளாவன முறையே
(1) சோறு, இறைச்சி, ஈரல் (2) கோதுமை, மீன், பால்
(3) சோறு, இறைச்சி, முட்டை (4) கோதுமை, மீன், முட்டை
(5) சோளம், ஈரல், பால்

**22.** அதன் உள்ளடக்கத்தில் விற்றமின் C உம் பெக்ரின் உம் அதிகளவு அடங்கிய உணவுப் பொருளாவது
(1) பயறு (2) போஞ்சி (3) விளாம்பழம் (4) தர்ப்பூசணி (5) கோவா

**23.** ஆழமான எண்ணெயில் பொரிப்பதற்காக மிகப் பொருத்தமான எண்ணெய் வகை எது ?
(1) ஒலிவ் எண்ணெய் (2) சோயா எண்ணெய்
(3) மரக்கறி எண்ணெய் (4) சூரியகாந்தி எண்ணெய்
(5) தேங்காய் எண்ணெய்

**24.** குடற்சாற்றில் அடங்கியுள்ள காபோவைதரேற்றுச் சமிபாட்டுக்கான இரு நொதியங்களாவன
(1) பெப்ரிடேசு மற்றும் லக்டேசு (2) மோல்ரேசு மற்றும் இலிப்பேசு
(3) சுக்குரேசு மற்றும் இலிப்பேசு (4) பெப்ரிடேசு மற்றும் மோல்ரேசு
(5) சுக்குரேசு மற்றும் லக்டேசு

**25.** போசணைச் சத்து அகத்துறிஞ்சல் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானதைத் தெரிவுசெய்க.
(1) பெரும்பாலும் விற்றமின்கள் சிறுகுடலின் கடைசிப் பகுதியில் அகத்துறிஞ்சப்படுகின்றன.
(2) உணவின் அமிலத்தன்மையானது கல்சியம் அகத்துறிஞ்சலை அதிகரிக்கின்றது.
(3) இன்சுலின் ஓமோன், இரும்பு அகத்துறிஞ்சலைத் தடைசெய்கின்றது.
(4) உணவில் காணப்படும் நீரில் அதிகமான வீதம் பெருங்குடலில் அகத்துறிஞ்சப்படுகின்றது.
(5) சடைமுளைகளில் கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின்கள் குருதிக்குள் அகத்துறிஞ்சப்படுகின்றது.

[பக். 4 ஐப் பார்க்க

26. போசணைப் பொருள்களின் அனுசேபம் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கிரெப்பின் வட்டத்தின்போது சக்தி, நீர், ஒட்சிசன் ஆகியன உற்பத்தியாக்கப்படுகின்றன.
(2) கீற்றோன் உடல்கள் புரத அனுசேபத்தின்போது உற்பத்தியாகும்.
(3) கிளைக்கோ பகுப்பின் இறுதியில் பைருவிக் அமிலம் உருவாகும்.
(4) கொழுப்பு அனுசேபத்தின்போது யூரியா உற்பத்தியாகும்.
(5) புரத அனுசேபத்தின்போது சிறுநீரகத்திற்குள் அமீனகற்றல் இடம்பெறும்.

27. உணவு நஞ்சாதலை ஏற்படுத்தும் ஒரு பக்றீரியா இனமானது
(1) ஹெலிகோபக்ரர் பைலோரா (*Helicobacter pylora*)
(2) இலக்டோபசிலஸ் அஸிடோபிலஸ் (*Lactobacillus acidophillus*)
(3) ஸ்ரெப்ரோகொக்கஸ் இலக்ரிஸ் (*Streptococcus lactis*)
(4) குளொஸ்றிடியம் பொடியுலினம் (*Clostridium botulinum*)
(5) அஸிரோபக்ரர் அசிரய் (*Acetobacter aceti*)

More Past Papers at
tamilguru.lk

28. பின்வரும் எந்த உணவிற்கான நற்காப்புக் காரணியாக சோடியம் பென்சோவேற்று பாவிக்கப்படுகிறது ?
(1) மாசுமெலோசு (2) பாகற்காய் வற்றல்
(3) பாகிடப்பட்ட பூசணி (4) அன்னாசி ஜாம்
(5) எலுமிச்சை ஊறுகாய்

29. உணவுகளை நற்காப்புச் செய்தல் தொடர்பான கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
*A* - பலாக்காயை உலர வைக்கும்போது நீரகற்றல் இடம்பெறும்.
*B* - நற்காப்புக்குப் பயன்படுத்தும் சீனி ஒரு சேதனச் சேர்வையாகும்.
*C* - இனிப்பு (ரொபி) தயாரிப்பின்போது கலவையின் pH பெறுமானம் குறைவடையும்.
*D* - ஜாம் (பழப்பாகு) தயாரிப்பின்போது கலவையின் செறிவு அதிகரிக்கும்.
இவற்றுள் சரியான கூற்றுகளாவன
(1) *A* யும் *B* யும் (2) *B* யும் *C* யும்
(3) *B* யும் *D* யும் (4) *A*, *B* மற்றும் *C*
(5) *A*, *B* மற்றும் *D*

30. எதைல் மதுசாரம் பின்வரும் எந்த உணவுத் தயாரிப்பின்போது உருவாகின்றது ?
(1) பான் கேக் (2) இக்லியாஸ் (3) பனிஸ்
(4) பற்றிஸ் (5) பட்டர் கேக்

31. உணவுப் பொருள்களைப் பொதியிடலுக்காகப் பயன்படுத்தப்படும் விறைத்த (தடித்த), அரை விறைத்த பொதியிடு பதார்த்தங்களுக்கான இரு உதாரணங்களாவன முறையே
(1) காட்போட், அலுமினிய தாள் (2) உலோகம், அலுமினிய தாள்
(3) கண்ணாடி, தடித்த பிளாத்திக்கு (4) தடித்த பிளாத்திக்கு, உலோகம்
(5) காட்போட், கண்ணாடி

32. இலக்டோபசிலசு பல்கரிகசு பக்றீரியா தேவைப்படுவது பின்வரும் எந்த உணவுத் தயாரிப்பின்போதாகும் ?
(1) யோகட் (2) பாற்கட்டி (3) தயிர்
(4) நெய் (5) பட்டர்

33. ஸ்ரூ செய்தல் தொடர்பான **தவறான** கூற்று யாது ?
(1) சமைத்தலுக்கு அதிக நேரம் தேவைப்படுகின்றது.
(2) போசணை அதிகளவில் இழக்கப்படுகின்றது.
(3) சமைத்தலின்போது பல உணவுப்பொருள்களைக் கலப்பதற்கு இயலுமாயிருக்கும்.
(4) மூடியால் மூடியவாறாக சமைத்தல் இடம்பெறல் வேண்டும்.
(5) தடிப்பாக்குவதற்காக சோள மா (Corn flour) பயன்படுத்தப்படுகின்றது.

34. கேக் வகையொன்று பேக் செய்த பின்னர் அதன் நடுப் பகுதி கீழிறங்கிக் காணப்பட்டது. இதற்குக் காரணமாக அமையக்கூடியது
(1) குறைந்தளவான நொதிக்கவைக்கும் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டமை
(2) முட்டை கூடியளவு இடப்பட்டமை
(3) சேர்வைப் பொருள்கள் நன்றாகக் கலக்கப்படாமை
(4) கனலடுப்பை அடிக்கடி திறந்து பார்த்தமை
(5) கனலடுப்பின் வெப்பநிலை அதிகரித்துக் காணப்பட்டமை

[பக். 5 ஐப் பார்க்க

**35.** கட்டிளமைப்பருவ பெண் பிள்ளையில் பெண் இனப்பெருக்க ஓமோன் உற்பத்தியாக்கப்படுவது
(1) கபச் சுரப்பியில் (2) அதிரினல் சுரப்பியில் (3) சூலகங்களில்
(4) கருப்பையில் (5) பலோப்பியன் குழாய்களில்

**36.** கர்ப்ப காலம் பொதுவாக
(1) 250 நாட்களாகும். (2) 260 நாட்களாகும். (3) 270 நாட்களாகும்.
(4) 280 நாட்களாகும். (5) 300 நாட்களாகும்.

**37.** பின்வருவனவற்றுள் கர்ப்ப காலம் தொடர்பான **பிழையான** கூற்று எது ?
(1) காலையில் குமட்டலும் வாந்தியும் ஏற்படலாம்.
(2) தாய்ப்பால் உற்பத்தி ஆரம்பிக்கும்.
(3) கால்களில் வீக்கம் காணப்படலாம்.
(4) நீரிழிவினால் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.
(5) அதிகமான நிறை அதிகரிப்பு இரண்டாவது மும்மாதத்தினுள் காட்டப்படும்.

**38.** வாழ்க்கை வட்டத்தில் துரிதமான உடல் மற்றும் இயக்க விருத்தி காணப்படும் பருவங்கள் இரண்டு
(1) குழந்தைப் பருவமும் முன் பிள்ளைப் பருவமும்
(2) முன் பிள்ளைப் பருவமும் பின் பிள்ளைப் பருவமும்
(3) பின் பிள்ளைப் பருவமும் கட்டிளமைப் பருவமும்
(4) குழந்தைப் பருவமும் கட்டிளமைப் பருவமும்
(5) முன் பிள்ளைப் பருவமும் கட்டிளமைப் பருவமும்


**39.** தேசிய நோயெதிர்ப்பு வேலைத்திட்டம் (2007) இற்கு ஏற்ப ஐவகைக் கூட்டு (Pentavalent) வக்சீனின் 4 ஆவது பகுதி, பிள்ளைக்கு எத்தனையாவது வயது நிரம்பியவுடன் வழங்கப்படுகின்றது ?
(1) 6 மாதம் (2) 9 மாதம் (3) 12 மாதம் (4) 18 மாதம் (5) 3 வருடங்கள்

**40.** பின் பிள்ளைப்பருவப் பிள்ளையொன்றிடம் காணக்கூடிய குணாம்சமாவது
(1) குழுவாகச் செயற்படுதலில் ஆர்வம்
(2) எண்ணக்கருவாக்கம் உயர்மட்டத்தில் காணப்படல்
(3) பிரச்சினை தீர்ப்பதில் ஈடுபடுதல்
(4) மனவெழுச்சிகளைத் தீவிரமாக வெளிப்படுத்துதல்
(5) பகற் கனவு காணல்


**41.** பின்வரும் நோய்களுள் பின் பிள்ளைப்பருவப் பிள்ளைக்கு வழங்கப்படும் தடுப்பு மருந்து மூலம் தவிர்க்கப்படும் நோய் எது ?
(1) கூகைக்கட்டு (2) சின்னமுத்து (3) போலியோ (4) ருபெல்லா (5) குக்கல்

**42.** கீழே தரப்பட்டுள்ள நடத்தைகளில் கட்டிளமைப்பருவத்தில் ஆலோசனை தேவைப்படும் நடத்தை யாது ?
(1) மற்றவர்களிலும் எடுத்துக்காட்டக்கூடியவராக இருப்பதில் ஆர்வம் காட்டுவார்.
(2) ஆக்ரோசமான நடத்தைகளைக் காட்டுவார்.
(3) சுயமாக முடிவுகளை எடுக்க முற்படுவார்.
(4) பெற்றோருடன் தர்க்கிப்பார்.
(5) வயதுவந்தோரின் தலையீட்டை விரும்பமாட்டார்.

**43.**



***A***



***B***

மேலே ***A*** மற்றும் ***B*** வரிப்படங்களில் ஒழுங்குமுறையில் காட்டப்படுவன
(1) நீள் குறுந் தையல், முறுக்குவடத் தையல்
(2) ஜேர்மன் முடிச்சுத் தையல் மற்றும் ரோமேனியன் தையல்
(3) ரோமேனியன் தையல் மற்றும் நீள் குறுந் தையல்
(4) ஜேர்மன் முடிச்சுத் தையல் மற்றும் முறுக்குவடத் தையல்
(5) முறுக்குவடத் தையல் மற்றும் நீள் குறுந் தையல்

[பக். 6 ஐப் பார்க்க

**44.** பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்று எது ?

(1) முன்னாயத்தத்தின்போது துணி நீரில் ஊறவைக்கப்பட்டு நன்றாகப் பிழிந்தப் பின்பு உலர விடப்பட வேண்டும்.

(2) ஐதான அமிலங்களினால் கம்பளி நார்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை.

(3) சரிவுக்கோட்டு நெசவு முறையில் நெய்யப்பட்ட துணிகள் வலிமை குறைவானவை.

(4) அலங்காரத் தையல் வேலையின்போது துணியின் மேற்பரப்பில் காட்டுருவைப் பிரதிசெய்து தைப்பதன் மூலம் நல்ல நேர்த்தியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(5) கொதிநீரில் அமிழ்த்தி வைப்பதன் மூலம் பட்டுத்துணிகளைச் சுத்தம் செய்யலாம்.

**45.** துணி தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நார் வகைகளின் பண்புகள் சில பின்வருவமாறு:

*A* - நிறையேற்றப்படலாம்.
*B* - தீயில் பிடித்தால் உருகும்.
*C* - நெகிழ்வுத்தன்மை அதிகம்
*D* - நார்களுக்குள் வளியை அடைத்து வைக்கலாம்.
*E* - சலவைப் பொருட்களில் காணப்படும் காரப் பொருள்களினால் பாதிப்பு ஏற்பட மாட்டாது.


இவற்றுள் நைலோன் நாரின் பண்புகளாவன

(1) *A, B* மற்றும் *C* ஆகும்.
(2) *A, D* மற்றும் *E* ஆகும்.
(3) *B, C* மற்றும் *D* ஆகும்.
(4) *B, C* மற்றும் *E* ஆகும்.
(5) *C, D* மற்றும் *E* ஆகும்.


**46.** தெறியோட்டையொன்றின் வெட்டப்பட்ட முனைகள் மற்றும் தடைமுனைகள் ஆகியவற்றைப் பூர்த்தியாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் தையல் முறைகள் முறையே

(1) வெட்டுக்குத்துத் தையல் மற்றும் மீன்முள்ளுத் தையல்
(2) கம்பளித் தையல் மற்றும் தெறியோட்டைத் தையல்
(3) மீன்முள்ளுத் தையல் மற்றும் வெட்டுக்குத்துத் தையல்
(4) தெறியோட்டைத் தையல் மற்றும் கம்பளித் தையல்
(5) மீன்முள்ளுத் தையல் மற்றும் கம்பளித் தையல்


**47.** கீழே தரப்பட்ட வரிப்படங்களில் ஒரு சேலை ரவிக்கை வெட்டுவதற்கான மாதிரியுருவின் பாகங்கள் எவ்வரிப்படத்தில் சரியாக ஒழுங்குபடுத்திக் காட்டப்பட்டுள்ளது ?




(1)




(2)



(3)



(4)



(5)

More Past Papers at
tamilguru.lk

**48.** பின்வருவன ஒரு மாணவனின் குறிப்பிலிருந்து பெறப்பட்ட சில கூற்றுகளாகும்.

*A* - சில்லுக் கோடு எனப்படுவது அடிப்படை மாதிரியுருவில் இடப்பட வேண்டிய ஓர் அடையாள வகையாகும்.

*B* - வெண்கட்டி மற்றும் பவுடர் என்பன கறை நீக்குவதற்காகப் பாவிக்கப்படும் உறிஞ்சிகளாகும்.

*C* - உடற்பகுதியின் அடிப்படை மாதிரியுருவை நிர்மாணிப்பதற்கு மார்பளவைக் கணிக்கும்போது இளக்க இடைவெளிக்காக ஐந்து சென்ரிமீற்றர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

*D* - 12% கோஸ்டிக் சோடாக் கரைசலில் ஊற வைக்கும்போது பருத்தி நாரின் கட்டமைப்பு மாறுகின்றது.

*E* - மேசைவிரிப்பின் வளைவான ஓரங்களை நேர்த்தியாக்கும்போது ஒரு நேர்ப்பட்டி இணைக்கப்பட்டு முழுமையாகப் பின்பக்கத்திற்குத் திருப்பி மடித்து தைக்கப்படல் வேண்டும்.

இவற்றுள் சரியான கூற்றுகளாக அமைவன

(1) *A, B* மற்றும் *D*
(2) *A, C* மற்றும் *E*
(3) *B, C* மற்றும் *D*
(4) *B, D* மற்றும் *E*
(5) *C, D* மற்றும் *E*

**49.** புடைவைத் தொழிநுட்பம் தொடர்பாக மாணவரொருவரினால் எழுதப்பட்ட கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இதில் **பிழையான** கூற்று எது ?

(1) இல்லத்துணியணிகளின் விளிம்பு நேர்த்திக்காக கரையலங்காரம் பயன்படுத்தப்படும்.
(2) 'சுருங்காமல் செய்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டுள்ள துணிகள் சலவை செய்யும்போது 1% இலும் அதிகமாகச் சுருங்க மாட்டாது.
(3) துணிச் சலவைக்காகப் பயன்படுத்தும் சவர்க்காரத்தில் TFM சதவீதம் குறைவாகக் காணப்படும்.
(4) ஆடைகளில் உள்ள அழுக்குத் துணிக்கைகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சோதனைப் பொருள்கள் மேற்பரப்புச் செயற்பாட்டுக் காரணிகள் எனப்படும்.
(5) வீட்டுத் துணிகளைத் தூய்மையாக்குவதற்கு சவர்க்காரம் சேர்க்கப்பட்ட நீரில் நீண்ட நேரம் ஊற வைப்பது சிறப்பாகும்.

**50.** புடைவைக்கு விறைப்பூட்டல் தொடர்பான சரியான கூற்று எது ?

(1) புடைவைகளை வெண்மையாக்குவதோடு உறிஞ்சல் தன்மையை அதிகரிக்கும்.
(2) வலிமையையும் பிரகாசத்தையும் தரும்.
(3) புடைவையில் உள்ள கறைகள் யாவும் நீக்கப்படும்.
(4) நார்களுக்கு மேற்பூச்சாகத் தொழிற்படுவதுடன் நிலைமின்னியலைக் குறைக்கின்றது.
(5) எவ்வகைத் துணிகளுக்கும் பொருத்தமானது.

* * *

AL/2018/28/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ගෘහ ආර්ථික විද්‍යාව II
மனைப் பொருளியல் II
Home Economics II

28 T II

24.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி **I** இல் **1** ஆம் வினா உட்பட **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் **5**ஆம் வினா உட்பட **நான்கு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

(1ஆம் வினாவும் வேறு **இரண்டு** வினாக்களும் உட்பட **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**1.** தொழில்புரியும், நகரத்தில் வாழும் எண்ணமுடைய புதுத் தம்பதியர் அதற்காக இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட மனையொன்றைத் தெரிவுசெய்துள்ளனர். புதிய அனுபவமாயினும் மனை வளங்களின் முகாமைத்துவம் மற்றும் மனை அலங்காரம் தொடர்பிலும் அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர்.

(i) மனையைத் தெரிவுசெய்வதில் அவர்களால் கருத்திற் கொள்ளப்பட்ட காரணிகள் **நான்கை** எழுதுக.

(ii) வீட்டின் வரவு செலவுப் பட்டியலைத் தயாரிப்பதற்காக அவர்களுக்கு வழங்கக்கூடிய **நான்கு** அறிவுறுத்தல்களை முன்வைக்க.

(iii) மின் சக்தியை வெப்பச் சக்தியாகவும் மின் சக்தியை பொறிமுறைச் சக்தியாகவும் மாற்றுவதன் மூலம் செயற்படும் உபகரணங்கள் சில அவர்களிடம் உள்ளன.

(*a*) அவ்வாறான உபகரணங்கள் **ஒன்று** வீதம் ஒழுங்குமுறையில் எழுதுக.

(*b*) வீட்டில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் தொடர்பாக அவர்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(iv) அவர்களின் வரவேற்பறைக் கதிரைத் தொகுதியில் தழுவணைகள் வைக்கப்பட்டுள்ளன.

(*a*) பல்வேறு நிறங்களினாலான ரிபன், இரேந்தை, சீக்குவின்ஸ் என்பவற்றைப் பயன்படுத்தி, தழுவணை உறையொன்றை அலங்கரிப்பதற்குப் பொருத்தமான வடிவமைப்பொன்றை வரைக.

(*b*) மேற்படி பொருள்கள் இவ்வடிவமைப்பில் பயன்படுத்தப்படும் விதத்தை நிறச் சேர்க்கையுடன் காட்டுக.

**2.** (i) குறிப்பெழுதுக.

(*a*) பெல்ட் செய்தல் (Felting)

(*b*) முடிச்சிட்டுச் சாயமிடும் முறை

(ii) ஆண் மேற்சட்டையொன்றை (shirt) தைத்துப் பூரணப்படுத்தும் ஒழுங்குமுறையை எழுதுக.

(iii) ஆடையொன்றினை அணிந்து பார்க்கும்போது அதன் உரிய வடிவம் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் விடயங்களை விளக்குக.

(iv) விஸ்கோஸ் ரெயோன் நார்களின் உற்பத்திச் செயன்முறையை விவரிக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

**3.** (i) மனை முகாமைத்துவச் செயன்முறை நான்கு படிமுறைகளைக் கொண்டது. அவற்றைப் பெயரிட்டு, அதன் ஒரு படிமுறையை விளக்குக.

(ii) வீடொன்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **ஐந்தைத்** தருக.

(iii) (*a*) மனை அலங்காரத்தில் முக்கியம் பெறும் பின்வரும் **இரண்டு** காரணிகளை இனங்காண்க.

- இயற்கைத் தன்மை
- செயற்பாட்டுத் திறன்

(*b*) மேலே (iii) (*a*) இல் குறிப்பிட்டுள்ள ஒரு காரணி வெளிப்படுமாறு ஒரு வீட்டின் திறந்த விறாந்தையை ஒழுங்குபடுத்தும் விதத்தை விளக்குக.

**4.** (i) (*a*) நடுநிலை வர்ணங்களைப் பெயரிடுக.

(*b*) வீட்டு அலங்காரத்திற்காக இந்த நிறங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை **மூன்று** உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

(ii) மென்மையான இழையமைப்பொன்றை வெளிக்காட்டும் விதமாக வரவேற்பறையொன்றை அலங்கரிக்கும் விதத்தினை விளக்குக.

(iii) ஆடைகளுக்கு

- அணையிடல் (லைனிங் இடல்)
- அலங்கார நுண் நாடாப் பிடித்தல் (பைப்பிங் செய்தல்)

ஆகியவற்றை விளக்குக.

More Past Papers at
tamilguru.lk

(iv) சேலை இரவிக்கையின் கழுத்து வடிவத்தினை சிறப்பாக நேர்த்தியாக்குவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.

## பகுதி II

(5 ஆம் வினாவும் வேறு **மூன்று** வினாக்களும் உட்பட **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**5.** ஒரு குடும்பமானது பெற்றோர், முன்பிள்ளைப்பருவத்திலுள்ள ஒரு மகள், பின்பிள்ளைப்பருவத்திலுள்ள ஒரு மகன் ஆகியோரைக் கொண்டுள்ளது. பெற்றோர் தொழிலில் ஈடுபடுபவர்கள். முன்பள்ளி அபிவிருத்தி நிலையமொன்றிற்குச் செல்லும் மகள், பெற்றோர் வரும்வரை பகல்நேர குழந்தைகள் பராமரிப்பு நிலையமொன்றில் தங்கியிருக்கின்றார். அவளுக்கான உணவும் அங்கேயே வழங்கப்படுகின்றது. உறவினரான அயல் வீட்டுப் பெண்ணொருவர் மகனுடன் பகல் வேளையில் தங்கியிருக்கின்றார்.

(i) இந்தக் குடும்பத்திற்கு வார நாளொன்றிற்கான பகல் உணவுவேளையொன்றைத் திட்டமிடும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **ஐந்து** குறிப்பிடுக.

(ii) மகளின் போசாக்கு மட்டத்தில் குறைபாடு காணப்படுவதாக முன்பள்ளி அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட வைத்திய சோதனையின்போது தெரியவந்துள்ளது. இந்த நிலைமை தொடர்பில் பிள்ளையில் வெளிக்காட்டப்படும் பண்புகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(iii) குடும்பத்தினரின் நுகர்வுக்காக சில வேளைகளில் வீட்டில் புதிய பழங்களைக் கொண்டு கோடியல் தயாரிக்கப்படுவதுண்டு. கோடியல் வகையொன்றைத் தயாரிப்பதற்கான ஒழுங்குமுறைகளை ஒரு பாய்ச்சல் கோட்டு வரிப்படம் மூலம் குறிப்பிடுக.

(iv) பின்பிள்ளைப்பருவப் பிள்ளையின் மொழி விருத்திக்காக பெற்றோரால் மேற்கொள்ளப்படக்கூடிய நடைமுறைகளை ஆராய்க.

(v) பகல்நேர குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தின் வகிபாகம் பற்றி மீளாய்வு செய்க.

[பக். 3 ஐப் பார்க்க

**6.** (i) கர்ப்பிணித் தாயொருவருக்கு அவரது நாளாந்த செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும்போது முக்கியத்துவம் பெறும் விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) 'விளையாட்டு வீடு' எவ்வாறு முன்பிள்ளைப்பருவ பிள்ளைகளின் விருத்திக்கு உதவுகின்றது என்பதை விளக்குக.

(iii) 'விலகித் தனித்திருத்தல்' சில பின்பிள்ளைப்பருவப் பிள்ளைகளிடம் காணப்படும் அசாதாரண நடத்தையாகும். இந்நிலைமை ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அதிலிருந்து விடுவிப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்மொழிக.

(iv) ஜனநாயக சூழல் கட்டிளமைப்பருவப் பிள்ளை விருத்தியில் முக்கியத்துவம் பெறும் விதத்தைக் கலந்துரையாடுக.

**7.** (i) சந்தைக்கு விநியோகிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டு, பொதியிடப்பட்ட உணவொன்றின் லேபல் ஒன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) உணவுப் பாதுகாப்பு கருதி கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **ஐந்து** முன்வைக்க.

(iii) உணவின் தரமானது இரண்டு செயன்முறைகளில் அதிகரிக்கப்படலாம். அவை 'வித்துகளை முளைக்கச் செய்தல்' மற்றும் 'புரதக் குறை நிரப்பல்' ஆகும். இச்செயன்முறைகள் மூலம் உணவின் தரம் மேம்படும் விதத்தினை விளக்குக.

(iv) சிற்றுண்டிகள் (short eats) நுகர்வு தற்காலத்தில் பிரபல்யம் அடைந்துள்ளது. இவ்வுணவுகள் மூலம் சமூகத்தின் போசணை நிலைமையில் ஏற்படும் தாக்கத்தை மீளாய்வு செய்க.

**8.** (i) பெரும் போசணைகளை இனங்கண்டு அவற்றில் ஒன்றின் தொழிற்பாடுகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) பாலூட்டும் தாய்மாருக்கான இரும்புச்சத்து தேவைக்கு அதிக பெறுமானம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களைத் தருக.

(iii) பின்வருவனவற்றை ஒப்புநோக்குக.

(*a*) மாப்பொருள் மற்றும் கிளைக்கோஜன்

(*b*) பாலை பாய்ச்சர் பாகம் செய்தல் மற்றும் பாலைக் கிருமியழித்தல்

(iv) நீரிழிவு நோயின் சிக்கல் தன்மையை விளக்குக.

**9.** (i) உங்களது பாடசாலையில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 'சுகவாழ்வும் போசணையும்' எனும் மருத்துவச் சேவையில் பங்குபற்றுவோரின் உடற் திணிவுச் சுட்டி அளவிடல் மற்றும் அதனுடன் தொடர்பான ஆலோசனை வழங்கல் பொறுப்பு உங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(*a*) 'உடற் திணிவுச் சுட்டி' அறிமுகப்படுத்துக.

(*b*) இதன் பெறுமானம் சாதாரண மட்டத்தினை விட அதிகரிக்கும் நிலைமைகள் இரண்டாகும். இந்நிலைமைகள் இரண்டையும் உரிய உடற் திணிவுச் சுட்டிகளின் பெறுமான வீச்சுடன் குறிப்பிடுக.

(*c*) இந்த நிலைமை உள்ளவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்காக வழங்க வேண்டிய அறிவுரைகளை விளக்குக.

(ii) பின்வரும் விடயங்கள் பற்றி கலந்துரையாடுக.

(*a*) பிள்ளைகளின் இயக்க விருத்திக்கும் உடல் விருத்திக்கும் இடையில் தொடர்புள்ளது.

(*b*) பிள்ளைகளின் விருத்தியில் சமவயதுக் குழுக்களின் நட்பு முக்கியமானது.

* * *